[24th January 1970

பொறியியற் கல்லூரிகளில் பணியாற்றும் கட்புல விளக்குநர்கள் சிற்றுசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பொறியியற் கல்லூரிகளில் பணியாற்றும் கட்புல விளக்குநர்கள் (Demonstrators) சிற்றுசிரியர்கள் (Tutors) ஆகியோருக்குப் பல்கலைக் கழக மானியக் குழு பரிவுரை செய்த ஊதிய விகிதங்களின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, சாதாரணமாகக் கல்லூரிகளில் இது போன்ற டியூட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை சில சமயம் இன்ஜினீயரிங் காலேஜுக்கு அவருடைய விருப்பத்தைப் பெருத படி நாமே மாற்றுகிறோம். ஆர்ட்ஸ் காலேஜிலிருந்து இன்ஜினீயரிங் காலேஜுக்குப் போகிறார்கள். ஆர்ட்ஸ் காலேஜுக்கு ஒரு ஸ்கேல், டெக்னிகல் காலேஜுக்கு ஒரு ஸ்கேல் இல்லாதபடி, ஒன்றுக்கு ஒன்று மாற்றக்கூடிய வேலையாக அது இருப்பதால், இன்ஜினீயரிங் காலேஜில் இதே ஸ்கேலை வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கலைக் கல்லூரியில் இருக்கிற உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற சம்பள விகிதத்தை யு.ஜி.சி.சிபாரிசுப்படி தொழில் துறை நிறுவனங்களுக்குத் தர வேண்டுமென்று இந்திய அரசிற்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது. அதை மாற்றுவதற்கில்லை என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு தங்களுடைய பொறுப்பில் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது பற்றிய முடிவு எடுக்கப் படும்.

Ragging.

*44. Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(a) whether there have been any objectionable forms of ragging in any of the professional colleges during the academic year 1969–70 ;

(b) the steps taken by the Government to prevent objectionable ragging during the current academic year ; and

(c) if so, the result of such steps ?

கல்லூரிகளில் மறுக்கத்தக்க வகையான இழி விளையாட்டுகள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1969–70–ஆம் கல்வி ஆண்டில் தொழில் கல்லூரிகள் எதிலேனும் மறுக்கத் தக்க வகையான இழி விளையாட்டுகள் (ragging) ஏதேனும் நடைபெற்றனவா ?

(இ) நடப்புக் கல்வியாண்டில் மறுக்கத் தக்க இழி விளையாட்டுக்களைத் தடுகக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

(உ) ஆமெனில், அந்த நடவடிக்கைகளினுல் ஏற்பட்ட பலன்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : At the beginning of this academic year in the Madurai Agricultural College one student having come to the hostel with bag and baggage left it because of objectionable forms of ragging. I do not want to describe those forms of ragging. Will the Government appoint some machinery, probably some wing of the Vigilance Department, to watch over these colleges at the time of the beginning of the academic year so that these forms of ragging which are objectionable may be brought to the notice of the Government at the earliest possible moment and effective steps taken to prevent even tragedies happening as it happened one year ago ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த இழி விளையாட்டுக்கள் மூலம் மாணவர்கள் துன்புறுத்தப்படுகிற செயல்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்று அதற்குத் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது. நான்கு பொறியியல் கல்லூரி மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். சென்ற ஆண்டில் அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அதற்கான அறிகுறி தென்படும்போது, கல்லூரி முதல்வர்களே நடவடிக்கை எடுத்துக்கொண்டதால், அது தடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு கோவை மருத்துவ மனையில் மாணவர்கள் இதில் ஈடுபடும்போது, கல்லூரி முதல்வர் அதில் ஈடுபட்டு எச்சரிக்கை விட்டு தடுத்து நிறுத்தினார்கள். அதன் மூலமாக எந்த விடுதியிலிருந்தும் அப்படி நடைபெற்றதாகத் தகவல் இல்லை. பல்கலைக் கழகப் பதிவாளர் எல்லாக் கல்லூரி முதல்வர்களுக்கும் இவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த இழி கேளிக்கையில் ஈடுபட்டால், கடுமையான தண்டனை தந்து வெளியே அனுப்பப்படும் அளவுக்கு நடவடிக்கை எடுக்கும்படி சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எந்தச் சம்பவமும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை.

THIRU D. SANTOSHAM : May I point out that some of the affected students are not able to come forward openly and make a complaint because that will make the position still worse ? That is why I just wanted to know whether the Government would appoint some machinery like some wing of the Vigilance Department so that apart from the students, information might come to the notice of the Government and effective steps might be taken.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யாராவது ஒருவர் அதைப் பற்றிய குறிப்பைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான், அதைப் பரிசீலிக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டோம் என்று சொல்ல வேண்டும். பெற்றோர்கள் மூலமாக இது போன்ற குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரலாம். எப்படியாவது கொண்டு வரவேண்டும். இவற்றைத் தடுத்து நிறுத்த ஆங்காங்குள்ள விடுதிக் காப்பாளர்கள் ஓயாமல் கண்காணிப்பாக இருந்து வருகிறார்கள். அக்கம் பக்கம் பார்த்து யாரும் கண்டு கொள்ளாத வகையில்தான் இப்படிப்பட்ட கேளிக்கைகள், விளையாட்டுகளைச் செய்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அதை கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

Christian Medical College, Vellore

*45. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —

(a) the amount paid to the Christian Medical College, Vellore by way of grant by the State Government during 1967–68 ; and